## இலங்கையுடனான விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான நான்காவது மீளாய்வு குறித்த அலுவலர் மட்ட உடன்படிக்கையினை பன்னாட்டு நாணய நிதியம் எட்டுகின்றது

பணிக்குழு விஜயத்தின் பின்னரான பூர்வாங்கக் கண்டறிகைகளைத் தெரிவிக்கின்ற பன்னாட்டு நாணய நிதிய அலுவலர் குழுக்களின் அறிக்கைகளைப் பணிக்குழு விஜயத்தின் பின்னரான ஊடக அறிக்கைகள் உள்ளடக்கின்றன. இவ்வறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களாவதுடன் அவை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்துக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. இப்பணிக்குழுவின் பூர்வாங்கக் கண்டறிகைகளின் அடிப்படையில், முகாமைத்துவத்தின் ஒப்புதலிற்கு உட்பட்டு அலுவலர்கள் அறிக்கையொன்றினைத் தயாரிப்பதுடன் இது கலந்துரையாடல் மற்றும் தீர்மானத்திற்காகப் பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபைக்குச் சமர்ப்பிக்கப்படும்.

- *பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதார மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நான்காவது மீளாய்வினை நிறைவுசெய்வதற்கான பொருளாதாரக் கொள்கைகள் குறித்த அலுவலர் மட்ட உடன்படிக்கையினை பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் இலங்கை அதிகாரிகளும் எட்டியுள்ளனர். மீளாய்வானது பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவுடன் நிதியிடலில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 344 மில்லியன் தொகைக்கான அணுகலினை இலங்கை கொண்டிருக்கும்.*

- *நிகழ்ச்சித்திட்டச் செயலாற்றமானது ஒட்டுமொத்த அடிப்படையில் தொடர்ந்தும் வலுவாகக் காணப்படுகின்றது. பொருளாதார வளர்ச்சியானது மீளெழுச்சியடைகின்றது. அரசிறைத் திரட்சி, ஒதுக்குச் சேகரிப்பு மற்றும் கட்டமைப்புசார் மறுசீரமைப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு முன்னேற்றமடைந்து வருகின்றன. படுகடன் மறுசீரமைப்பானது ஏறத்தாழ நிறைவடைந்துள்ளது. முக்கியமாக, அரசாங்கமானது நிகழ்ச்சித்திட்டக் குறிக்கோள்களிற்காகத் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் காணப்படுகின்றது.*

- *இருப்பினும், உலகளாவிய வர்த்தகக் கொள்கைசார் நிச்சயமற்றதன்மையானது இலங்கைப் பொருளாதாரத்திற்குக் குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கின்றது. இவை பொருண்மியமாகுமாயின், தாக்கத்தினை மதிப்பிடுவதற்கும் பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் வரையறைகளினுள் கொள்கைப் பதிலிறுத்தல்களை உருவாக்குவதற்கும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் இணைந்து பணியாற்றுவர்.*

**வொஷிங்டன் டி.சி:** கொழும்பு மற்றும் வொஷிங்டன் டி.சியில் நடைபெற்ற பன்னாட்டு நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் வருடாந்த பொதுக்கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களிற்குப் பின்னர் இலங்கைக்கான பன்னாட்டு நாணய நிதியப் பணிக்குழுப் பிரதானி திரு. இவான் பாபகேர்ஜியோ பின்வரும் அறிக்கையினை வெளியிட்டார்:

"பன்னாட்டு நாணய நிதியத்தின் 48-மாத விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டினால் ஆதரவளிக்கப்பட்ட இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நான்காவது மீளாய்வு குறித்த அலுவலர் மட்ட உடன்படிக்கையொன்றினைப் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் இலங்கையின் அதிகாரிகளும் எட்டியுள்ளனர். சிஎஉ 2.3 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) கொண்ட மொத்தத் தொகையொன்றினைக் கொண்ட விரிவாக்கப்பட்ட நிதிய வசதியானது பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபையினால் 2023 மாச்சு 20 அன்று ஒப்புதலளிக்கப்பட்டது.

"அலுவலர் மட்ட உடன்படிக்கையானது பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபை ஒப்புதலுக்குட்பட்டதாகக் காணப்படுவதுடன், இது (i) மின்சார செலவு மீட்சி விலையிடலினை மீட்டெடுத்தல் மற்றும் தன்னியக்க மின்சார விலைச் சீராக்கப் பொறிமுறையின் முறையான தொழிற்பாட்டினை நிச்சயப்படுத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய முன்கூட்டிய நடவடிக்கைகளின் நடைமுறைப்படுத்தல் மற்றும் (ii) பல்புடைப் பங்காளர்களின் அர்ப்பணிக்கப்பட்ட நிதியிடல் பங்களிப்புக்களையும் போதியளவிலான படுகடன் மறுசீரமைப்பு முன்னேற்றத்தினையும் உறுதிப்படுத்துவதில் கவனம் செலுத்தும் நிதியிடல் உத்தரவாத மீளாய்வின் நிறைவு என்பவற்றில் தங்கியுள்ளது.

“நிறைவேற்றுச் சபை மீளாய்வின் நிறைவினையடுத்து, இலங்கை சிஎஉ 254 மில்லியன் தொகைக்கான (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 344 மில்லியன்) அணுகலினைக் கொண்டிருக்குமென்பதுடன் இது ஏற்பாட்டின் கீழ் பன்னாட்டு நாணய நிதியத்தின் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியிடல் ஆதரவினை சிஎஉ 1,270 மில்லியனிற்குக் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1,722 மில்லியன்) கொண்டுவரும்.

“இலங்கையின் பேராவல்மிக்க சீர்திருத்த நிகழ்ச்சிநிரலானது பாராட்டத்தக்க பெறுபேறுகளைத் தொடர்ந்து விளைவிக்கின்றது. நெருக்கடிக்குப் பின்னைய வளர்ச்சி 2024இல் 5 சதவீதம் கொண்ட மீளெழுச்சியொன்றினைப் பதிவுசெய்துள்ளமையானது குறிப்பிடத்தக்கதொன்றாகக் காணப்படுகின்றது. அரசிறைத் திரட்சி மறுசீரமைப்புக்கள் அரசிறையிலிருந்தான மொ.உ.உற்பத்தி வீதத்தினை 2022இல் பதிவுசெய்யப்பட்ட 8.2 சதவீதத்திலிருந்து 2024இல் 13.5 சதவீதத்திற்கு மேம்படுத்தின. மத்திய வங்கியின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கணிசமானளவிலான வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளின் விளைவாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2025 மாச்சு இறுதியில் ஐ.அ.டொலர் 6.5 பில்லியன் தொகையினை எட்டின. கணிசமானளவிலான இறைச் சீர்திருத்தங்கள் பொது நிதிகளை வலுப்படுத்தியுள்ளன. இலங்கையின் படுகடன் மறுசீரமைப்பானது ஏறத்தாழ நிறைவடைந்துள்ளது.

“நிகழ்ச்சித்திட்ட செயலாற்றமானது ஒட்டுமொத்த அடிப்படையில் தொடர்ந்தும் வலுவாகக் காணப்படுகின்றது. பூர்வாங்கத் தரவுகளின் அடிப்படையில், தரவுகள் கிடைப்பனவாகவுள்ள அநேகமான மாச்சு இறுதியளவிலான அளவுசார் இலக்குகள் நிறைவுசெய்யப்பட்டன. ஏப்பிறல் இறுதியளவில் நிலுவையிலிருந்த அநேகமான கட்டமைப்புசார் அளவுகோல்கள் ஒன்றில் நிறைவுசெய்யப்பட்டிருந்தன அல்லது தாமதமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. இருப்பினும், செலவு மீட்சி மின்சார விலையிடல் குறித்த தொடர்ச்சியான கட்டமைப்புசார் அளவுகோல் தொடர்ந்தும் நிறைவுசெய்யப்படாதுள்ளது. பணவீக்கமானது நாணயக் கொள்கை ஆலோசனை இலக்கு வீச்சிற்குக் கீழாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

“அண்மைய வெளிநாட்டு அதிர்வு மற்றும் வளர்ச்சியடைந்து வருகின்ற அபிவிருத்திகள் என்பன சுய பொருளாதார நெருக்கடியிலிருந்து இன்னமும் மீட்சியடைந்து கொண்டிருக்கின்ற இலங்கைப் பொருளாதாரத்திற்குக் குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மையினை உருவாக்கின்றன.

“உலகளாவிய நிச்சயமற்றதன்மையினை எதிர்கொள்வதற்கு, நீடித்துநிலைத்திருக்கின்ற அரசிறைத் திரட்சி முயற்சிகள் மற்றும் முன்மதியுடைய வரவு செலவுத்திட்ட நிறைவேற்றம் என்பன, அதிர்வுகள் பொருண்மியமாகுமெனில், பொருத்தமான பதிலிறுப்புக்களை அனுமதித்து, வரையறுக்கப்பட்ட இறை இடைவெளியினைப் பாதுகாப்பதற்கு முக்கியமானவையாகத் தொடர்ந்து காணப்படுகின்றன. செலவு மீட்சி மின்சார விலையிடலினை மீட்டெடுத்தலானது இறை இடர்நேர்வுகளைக் குறைப்பதற்கும் பொருத்தமான மின்சார உட்கட்டமைப்பு முதலீடுகளை இயலச்செய்வதற்கும் இன்றியமையாததாயுள்ளது. வரி விலக்களிப்புக் கட்டமைப்பானது அரசிறைச் செலவுகள் மற்றும் ஊழல் இடர்நேர்வுகள் என்பவற்றை குறைக்கும் வேளையில் வளர்ச்சியினை இயலச்செய்யும் விதத்தில் நன்கு வடிவமைக்கப்பட வேண்டும். வரி இணங்குவிப்பினை அதிகரிப்பதற்கான சீர்திருத்தங்கள் மேலதிக வரி வழிமுறைகளை மேற்கொள்ளாமல் அரசிறை இலாபமீட்டல்களினை விளைவிப்பதற்கு முக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

“அதேபோன்று, அதிர்வுகள் பொருண்மியமாகுமெனில் பொருத்தமான பதிலிறுப்புக்களை அனுமதிப்பதற்கு ஒதுக்குத் திரட்சியினூடாக வெளிநாட்டுத் தாங்கியிருப்புக்களை மீள்கட்டியெழுப்பலானது தொடர்ந்தும் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது. பணவீக்க அழுத்தங்கள் தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் வங்கிகள் நன்கு மூலதனப்படுத்தப்பட்டுள்ளன. இருப்பினும், நீடித்துநிலைத்திருக்கின்ற விலை மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டினை நிச்சயப்படுத்துவதற்குத் தொடர்ச்சியான கண்காணிப்பானது தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

“இந்நிச்சயமற்ற தருணத்தில் ஏழ்மையிலுள்ளவர்களையும் பாதிக்கப்படக்கூடியவர்களையும் பாதுகாப்பதற்கான முக்கிய பொறுப்பு அரசாங்கத்திடம் காணப்படுகின்றது. சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களின் இலக்கிடல், போதுமாந்தன்மை மற்றும் உள்ளடக்கம் என்பவற்றினை மேம்படுத்துவதற்கான முயற்சிகளைத் தொடர்வது முக்கியமாகக் காணப்படுகின்றது. இறை ஆதரவானது நன்கு இலக்கிடப்பட்டு, காலவரையறைக்குட்பட்டு, தற்போதுள்ள வரவு செலவுத்திட்டக் கட்டமைப்பினுள் காணப்பட வேண்டும்.

“நிகழ்ச்சித்திட்டக் குறிக்கோள்களிற்கான புதிய அரசாங்கத்தின் நிலையான அர்ப்பணிப்பானது நம்பிக்கையினை மேம்படுத்தியுள்ளதுடன் கொள்கைத் தொடர்ச்சியினை நிச்சயப்படுத்துகின்றது. முன்னோக்கிச் செல்கையில், குறைவடைந்து செல்கின்ற ஊழல் பாதிப்படையக்கூடியதன்மைகள் உள்ளடங்கலாக நீடித்துநிலைத்திருக்கின்ற சீர்திருத்த உத்வேகமானது, கடின உழைப்பினால்

வென்றெடுக்கப்பட்ட மேம்பாடுகளைப் பாதுகாப்பதற்கும் பேரண்டப்பொருளாதார மற்றும் படுகடன் நீடித்துநிலைத்திருக்கக்கூடியதன்மையினை நிலைபேறான அடிப்படையில் மீட்டெடுப்பதற்கும் வலுவான மற்றும் அனைவரையுமுள்ளடக்கிய வளர்ச்சியினை வெளிக்கொணர்வதற்கும் இன்றியமையாததொன்றாகக் காணப்படுகின்றது.

‘‘பன்னாட்டு நாணய நிதியக் குழுவானது கௌரவ நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் முனைவர். ஹர்ஷன சூரியப்பெரும, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர். பி. நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் திரு. கே. எம். மஹிந்த சிறிவர்த்தன மற்றும் ஏனைய சிரேஷ்ட அலுவலர்கள் ஆகியோருடன் வொஷிங்டன் டி.சியில் சந்திப்புக்களை நடாத்தியது.

‘‘சிறப்பான கலந்துரையாடல்களிற்கும் வலுவான ஒத்துழைப்பிற்கும் அதிகாரிகளுக்கு நாம் நன்றி கூற விரும்புகின்றோம்.’’